**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 26-09-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-09-26 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-09-27 | 2023-09-28 | 2023-09-29 | 2023-09-30 | 2023-10-01 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 4.0 | 3.0 | 2.0 | 0.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 36.0 | 36.0 | 35.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 26.0 | 25.0 | 25.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 50 | 40 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12 | 12 | 16 | 18 | 18 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 230 | 230 | 230 | 230 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 6 | 6 | 7 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் செப்டம்பர் 27, 28, 29 மற்றும் அக்டோபர் 01 ஆகிய தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது . அதிகபட்ச வெப்பநிலையானது 35-36 " செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 முதல் 18 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : அக்டோபர் 01 முதல் அக்டோபர் 07 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில்இயல்பிற்கு மேல் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும்.

## குறுஞ்செய்தி :

பருவமழை தொடங்குவதற்கு முன்னர் கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்யிது கொள்ளவும் .

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | சம்பா பருவத்தில் செம்மை நெல் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் செம்மை நெல் மிகக் குறைந்த விதையளவு - 5 கிகி / எக்டர் போதுமானது 14 நாட்கள் வயதுடைய நாற்றுக்களை நடவு செய்தல் .சதுர நடவு முறையில் குத்துக்கு ஒரு நாற்று (22.5* 22.5 செமீ /25*25 செமீ) இடைவெளியில் நடவு செய்யவேண்டும். நடவு செய்த 10,20,30,40 நாட்களில் கோனோவீடர் பயன்படுத்தி களைகளை மண்ணில் அமிழ்த்தி உரமாக்குதல் வேண்டும். இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி தழைச்சத்து உரங்கள் இடுதல் .நீர் மறைய நீர் கட்டுதல் வேண்டும். இது போன்ற தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுதல் மூலம் உற்பத்தி செலவு குறைந்து மகசூல் அதிகரிப்பதால், விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கிறது.நேரடி விதைப்பு செய்த வயல்களில் பயிர் முளைத்த 3-4 தினங்களுக்குள் ஏக்கருக்கு பெண்டிமெத்திலின் 1 லிட்டர் அல்லது பிரிட்டிலாகுளோர் +சேப்னர் (சோ பிட் ) 500 மில்லி என்ற அளவில் விதை முளைக்கப் போதுமான மழை பெய்த உடனேயே தெளித்துக் களையைக் கட்டுப்படுத்தலாம் |
| நிலக்கடலை | லோசனமழை மட்டும் எதிர்பார்க்கப்படுவதால் நிலக்கடலை பயிர் அறுவடை செய்து நிழலில் செடியுடன் உலர்த்துவது மூலம் விதை முளைப்பதை தடுக்கலாம். |
| உளுந்து | உளுந்து மற்றும் பாசிப்பயிறு விதைப்பு செய்யவுள்ள விவசாயிகள் இருக்கின்ற ஈரப்பதத்தை பயன்படுத்தி புதிய உயர் விளைச்சல் உளுந்து இரகங்களான வம்பன் 8 வம்பன் – 11 மற்றும் பாசிப்பயிறு இரகங்களான வம்பன் 5, கோ-9 இரகங்களை விதைப்பு செய்யலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தக்காளி | கடந்த வாரம் ஒரு சில இடங்களில் தொடர்ந்து மழை பெய்த காரணத்தால் தக்காளியில் வேரழுகல் நோய் அதிக அளவில் காணப்படுகிறது .இதனை கட்டுப்டுத்த காப்பர்ஆக்ஸிகுளோரைடு என்ற மருந்தை 1லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் வீதம் கலந்து ஊற்ற வேண்டும் . |
| வாழை | மேக மூட்டத்துடன் தூறலும் கலந்து காணப்படுவதால் ஒரு சில இடங்களில் மஞ்சளில் சிக்காடோக்கா இலைப்புள்ளி நோய் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணித்து நோய் தென்பட்டால் குளோரோதளானில் 2மிலி அல்லது புரோபிக்கோனொஸோல் 2 கி என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| கத்திரிக்காய் | கத்திரி பயிரில் கண்ணாடி இறக்கைப் பூச்சியின் தாக்குதல் தென்பட வாய்ப்பு உள்ளது. இவ்வகைப் பூச்சியின் தாக்குதலால் இலைகள் மஞ்சள் நிறமாய் மாறி விடும். சேதமடைந்த இலைகளில் பூச்சியின் உரித்ததோல் மற்றும் கழிவுகளால் மூடியிருப்பதைக் காணமுடியும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 40 மில்லி வேப்ப எண்ணெய் மற்றும் 40 கிராம் சூடோமோனஸ் உடன் 20 மில்லி கோழிமுட்டையின் வெள்ளைக்கருவை கலந்து தெளிக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடைகளைத் தாக்கும் தொண்டை அடைப்பான் நோயானது பெரும்பாலும் மழைக் காலங்களிலேயே மிகுதியாக காணப்படுகிறது. கறவை மாடுகள் குறிப்பாக எருமை மாடுகள், கலப்பினப் பசுக்கள் இந்நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றன. இந்நோய் தாக்கிய கால்நடைகளுக்கு கடுமையான காய்ச்சல் ஏற்படுவதுடன் தலை, கழுத்து, தொண்டை, மார்பு போன்ற பகுதிகளில் வீக்கமும் ஏற்படும். இந்த நோயின் கிருமிகள் ஈரப்பதமான மற்றும் நீர் நிறைந்த நிலைமைகளில் நீண்ட காலம் உயிர்வாழும். இதனை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைக் காலத்திற்கு முன்பே அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி மாடுகளுக்கு தடுப்பூசி போடுவது அவசியம் ஆகும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | கோழிகளைத் தாக்கும் கழிச்சல் நோய் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. நோய் தாக்கப்பட்ட கோழிகளை தனியாக பிரித்து வைத்து பராமரிக்க வேண்டும். பின் நோய் பாதிக்கப்பட்ட மற்றும் நோய் பாதிக்கப்படாத கோழி மற்றும் குஞ்சுகளுக்கு 1 லிட்டர் தண்ணீரிணீல் 2கிராம் மைக்ரசால் பவுடர் அல்லது 2கிராம் பேக்டிரிசால் பவுடர் மருந்துகளில் ஏதேனும் ஒன்றுடன் 5 மில்லி வைம்ரால்சிரப் இரண்டையும் கலந்து அனைத்து கோழிகளுக்கும் 5 நாட்களுக்கு காலை மாலை என 2 வேளை குடிக்க கொடுக்க வேண்டும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | அடுத்த மூன்று நாட்களில் குறைந்த அளவு மழை எதிர்பார்க்கப்படுவதால் குறுவை பருவ நெல்லை அறுவடை செய்ய உகந்த காலமாகும். அறுவடை செய்த நெல் மணிகளை உலர்வான இடங்களில் சேமிக்கவும். |
| பொது ஆலோசனை | மண் வளத்தை மேம்படுத்தி அதிக மகசூல் பெற ஏக்கருக்கு 20 கிலோ சணப்பை அல்லது தக்கைப்பூண்டு அல்லது நவதானியங்கள் பூக்கும் முன் 30 -40 நாட்களில் மடக்கி உழ வேண்டும் . |